II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**O.S.No. 450 of 2023**

Deposition of witness for the Plaintiff / PW1
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 22.01.2026

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கீதா | Age | : | |
| Father's / Husband's Name | : | | | : | |
| Taluk | : | | Distict | : | |

<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

1ம் பிரதிவாதி சேகர் எனது அண்ணன். 2ம் பிரதிவாதி விஜயலட்சுமி எனது அக்காள். எனது தாத்தா குழந்தை பத்ரவி முதலியாருக்கு சொத்து உள்ளது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் தாத்தா பெயரில் சொத்து எதுவும் கிடையாது என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. அதனால் தான் எனது வழக்குரையில் 3வது பத்தியில் 3 ஏக்கர் என்றும் எனது முதல் விசாரணையில் 2 ஏக்கர் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் சர்வே எண்ணையும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. என் தாத்தா பெயரில் வீடு இருந்ததற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். வேதகிரி என் தகப்பனார். என் தந்தை தாத்தாவின் சொத்தை விற்றுவிட்டதாக சொல்வதற்கும் கிரைய ஆவணம் எதனையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தாத்தாவின் சொத்தை விற்று அந்த தொகையில் 1961ம் ஆண்டில் என் தந்தை வழக்கு சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்று வா.சா.ஆ.1 ல் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ஆம். அவ்வாறு வாசகங்கள் எதுவும் வா.சா.ஆ.1ல் இல்லை என்றும், வழக்கு சொத்து என் தந்தையின் சுய வருமான சொத்து என்றாலும் சரியல்ல. என் தந்தை

உணவு கழகத்தில் வேலை பாத்தாரா என்றால் ஆம். மூட்டை தூக்கும் வேலை பார்த்தார். அந்த வருமானத்தில் இருந்து தான் வழக்கு சொத்தை வா.சா.ஆ.1ன் படி எனது தந்தை ஒரு தர்மவதனி என்பவரிடம் இருந்து கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல. என் தந்தை 1987ல் வழக்கு சொத்தை பொருத்து 1ம் பிரதிவாதியின் பெயருக்கு ஒரு செட்டில்மெண்ட் ஆவணத்தை ஏற்படுத்தினார் என்றால் எனக்கு தெரியாது. மறைத்து ஏற்படுத்தி கொண்டார்கள். வழக்கு சொத்து என் தந்தையின் சுய வருமான சொத்து என்பதால் அவர் 1ம் பிரதிவாதியின் பெயருக்கு செட்டில்மெண்ட் செய்ய எங்களது கையொப்பம் தேவையில்லை என்றால் சரியல்ல. பட்டா எண். 629, 1ம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. அதன் பிறகு 1ம் பிரதிவாதி 2015ம் ஆண்டு தனது மகன்கள் பெயரில் வழக்குசொத்தை உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. 2015ம் ஆண்டு வாக்கில் தான் செட்டில்மெண்ட் ஆவணம் பற்றி தெரியவந்தது. என் தந்தை 2014 – 2015 ஆண்டு இறந்துவிட்டார். நான் சொத்து கேட்டு சண்டை போட்டேன். இந்த விவரத்தை வழக்குரையில் ஏன் சொல்லவில்லை என்றால் எனக்கு படிக்க தெரியாது. வழக்கு சொத்து என் தந்தையின் தனிப்பட்ட சொத்து என்பதால் அவர் உயிருடன் இருக்கும் வரை அந்த சொத்தை பொருத்து எந்த ஏற்பாட்டையும் செய்வதற்கு அவருக்கு உரிமை உள்ளது என்றால் சரியல்ல. எவ்வித முகாந்திரம் மற்றும் ஆதாரமும் இல்லாமல் இந்த பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே எனக்கு பாகம் எதுவும் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வழக்கு மூலம் இல்லாததால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.